**செய்தி வெளியீடு எண்.66/2018 நாள் 07.11.2018**

# சென்னைக் குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டம் .

-----

சென்னைக்குடிநீர் வாரியத்தில், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய சுகாதார காப்பீட்டுத்திட்டம் **2018, 01.11.2018** முதல் அமுல்படுத்தப்பட உள்ளது. இது குறித்து வாரிய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்களது ஓய்வூதிய புத்தகம் (Original) மற்றும் அதன் நகல், கணவன் / மனைவி அவர்களது தலா **2** புகைப்படங்களுடன் சென்னைக்குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் , நிதி (ஓய்வூதியம்) பிரிவை அணுகி Form-IV இரண்டு படிவங்களை பூர்த்தி செய்து அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த திட்டத்தில் பயனடையும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின், ஓய்வூதியத்தில் இருந்து பிரதி மாதம் ரூ.**350/-** **01.11.2018** முதல் பிடித்தம் செய்யப்படும். இந்த திட்டத்தின் மூலம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ரூ. **4** லட்சம் வரை, **4** ஆண்டு காலம் வரை **(2018-2022)** பயன்படுத்திக் கொள்ளலாம். வருகின்ற **07.11.2018** முதல் காலை **11** மணி முதல் **5** மணி வரை பூர்த்தி செய்த படிவங்கள் பெறப்படும். இந்த மருத்துவ காப்பீட்டு சலுகையை **01.11.2018** முதல் பயன்படுத்திக் கொள்ளலாம் என சென்னைக்குடிநீர் வாரியம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்